# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 வைகாசி 27 (10-06-1998) புதன்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:166


# யுத்த செய்திகளை நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்த எதிரணி முயற்சி!

## அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீது இன்று விவாதம்

கொழும்பு, ஜூன் 10

செய்தித்தடை மூலம் வெளியாகாமல் தடுக்கப்பட்ட-யுத்தம் சம்பந்தமான – செய்திகளை நாடாளுமன்றம் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் திட்டமிட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதம் இன்று காலை 9-00 மணிக்கு நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகும்போது அதனை சரியான சந்தர்ப்பமாகப் பயன்படுத்த அந்த உறுப்பினர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையின் போது நாட்டின் பாதுகாப்புப் பற்றியே அதிகம் பேசப்படும் என்பதால், அந்தச் சாட்டில் யுத்த நிலைமை, அதில் அண்மைக் காலத்தில் அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் போன்றவற்றை புட்டுவைக்க இந்த எம். பிக்கள் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

யுத்தச் செய்திகளைப் பிரசுரிக்காமல் தடுக்கும் விதத்தில் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் அவசர கால விதிகளின் கீழ் நாடாளுமன்றில் ஆற்றப்படும் உரைகள் எதனையும் பிரசுரிக்காமல் துணிக்கை செய்யவோ, தடை செய்யவோ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் நாடாளுமன்றத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நீர்கொழும்பில் நேற்று

## மண்எண்ணெய் சேமிப்பு கிடங்கில் குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜூன் 10

நீர்கொழும்பு கடைத் தொகுதிக்கு முன்னால் இருக்கும் ப.நோ.கூ. சங்கத்தின் மண்ணெண்ணெய்க் களஞ்சியத்தில் நேற்றுக்காலை4மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பினால் மண்ணெண்ணெய்க் களஞ்சியப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் காயமடைந்தார். களஞ்சியக் கண்ணாடிகள், ஜன்னல்கள் ஆகியன சேதமடைந்தன.

களஞ்சியம் தீப்பற்றி எரிந்திருந்தால் நிலைமை மிகவும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தலைமறைவான சிப்பாய் 5 துப்பாக்கிகளுடன் கைது

மட்டக்களப்பு, ஜூன் 10

இராணுவத்திலிருந்து தலைமறைவான இராணுவச் சிப்பாய் ஒருவரிடமிருந்து ஐந்து துப்பாக்கிகள் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கேகாலை வல்லப்பனைப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

படையிலிருந்து தப்பி ஓடிய மேற்படி இராணுவச் சிப்பாயைக் கைது செய்யச் சென்ற பொலீஸார் அங்கு வீட்டில் மேற்கொண்ட தேடுதலில் இவை மீட்கப்பட்டனவாம்.

மேற்படி துப்பாக்கிகள் பற்றறிகளில் இயங்குவது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்,

இராணுவச் சிப்பாயை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமபடி கேகாலை நீதிபதி உத்தரவிட்டார், (உ-21)

### யாழ். - திருமலை இடையே

## பயணிகள் சேவையில் கொரிய நாட்டுக் கப்பல்

காங்கேசன்துறைக்கும்- திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்துவதற்காக கொரிய நாட்டுக் கப்பல் ஒன்றை வடமாகாணமீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைகுத்தகைக்குப் பெறவிருக்கிறது.

இந்தக் கப்பலைப் பார்வையிடுவதற்காக அந்த அதிகார சபையின் அதிகாரிகள் குழு ஒன்று கொரியாவுக்குச் சென்றுள்ளது.

அந்தக் குழு திரும்பியதும் அக்கப்பலை வாடகைக்கு அமர்த்துவது தொடர்பாக இறுதி முடிவு செய்யப்படும் என்று அச்சபையின் தலைவர் கே. ஓபடகே தெரிவித்தார்.

இக் கப்பலைச் சேவையில் ஈடுபடுத்தப் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

(உ-3)

## வடமாகாண வீதிகளை புனரமைக்க ரூ. 22 கோடி!

கொழும்பு, ஜூன் 10

வடமாகாணத்தில் உள்ள தேசிய வீதிகளைப் புனரமைக்க 22 கோடி ரூபாவை வீதி அதிகாரசபை ஒதுக்கியுள்ளதாக வடக் மீள் குடியமர்வு, புனரமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

யாழ். பிரதேசத்தில் செலவிட 10 கோடி ரூபாவும், வடமாகாணத்தில் ஏனைய பிரதேசங்களில் செலவிட 12 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மீள் குடியமர்வு, புனரமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் இந்த விவகாரம் தொடர்பாக வீதி அதிகாரசபை அதி

(10ஆம் பக்கம் பார்க்க)

### அகதிகளை ஏற்றிவராமல்

## 'லங்கா முடித' கப்பல் கொழும்பு சென்றது

திருகோணமலை, ஜூன் 10

திருகோணமலையில் இருந்து அகதிகளைஅழைத்து வரும் சேவையில் இரு தடவைகள் ஈடுபடும் என எதிர்பார்க்கப்பட்ட ''லங்கா முடித'' கப்பல் அச்சேவைகளை நடத்தாமல்தற்போது கொழும்பு சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இந்தக் கப்பலை திருகோணமலைக்கு அனுப்பி இரு தடவைகளில் இரண்டாயிரம் அகதிகளை அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இந்தச் சேவையை நடத்தாமல் கப்பல் தற்சமயம் கொழும்பு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் தமிழர்கள் கைதாவதை ஆட்சேபித்து வெகுஜனப் போர்!

### தமிழ் மன்றங்களின் ஒன்றியம் முயற்சி

கொழும்பு,ஜூன் 10

அவசரகால சட்ட விதிகளின் கீழ் தமிழ் மக்கள் கொழும்பில் கைது செய்யப்படுவதை எதிர்த்து வெகுஜனப் போராட்டம் நடத்துவது தொடர்பாக நேற்றுக் கொழும்பில் நடந்த கொழும்புதமிழ்மன்றங்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் விவேகானந்தசபை, இந்துமாமன்றம், தமிழ் இளைஞர் கலாசாரக் கூட்டமைப்பு, தொண்டா மன்றம் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தேடுதல்கள்

திருகோணமலை, ஜூன் 10

திருகோணமலை நகரில் கடந்த சில தினங்களாகப் பரவலாக தேடுதல்கள் இடம்பெற்று வருவதாகக் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவல்களை அடுத்தே தேடுதல்கள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தணிக்கை

யுத்தச்செய்திகளுக்கான தடை உத்தரவு காரணமாக பிரசுரத்துக்கு முன் அனுமதி பெறாத இராணுவச் செய்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ-ர்)

### மட்டக்களப்பில்

## இரு கிராமத்தவர்கள் நேற்று கோஷ்டி மோதல்

### 19 பேர் காயமுற்றனர்

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களின்வாசிகளிடையேநேற்று இடம்பெற்ற கோஷ்டி மோதலில் 19 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு புதுக்குடியிருப்பு கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நீதிமன்றங்களின் அமர்வுகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் நேற்று முன்தினம் முதல் (8-6-98) காலவரையறையின்றி தமது அமர்வுகளை நிறுத்தியுள்ளன.

இதற்கான அறிவித்தல் நீதிமன்றங்களில் அமைந்திருக்கும் அறிவித்தல் பலகையில் நீதிமன்றப் பதிவாளர்களினால் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட நீதிபதியாக பி. பாலசந்திரனும், பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதியாக விக்னராசாவும், மல்லாகம் நீதிமன்ற நீதிபதியாக மு. திருநாவுக்கரசுவும் சாவகச்சேரி நீதிமன்ற நீதி

(10 ஆம் பக்கம் பார்க்க),

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

10 - 06 - 98 இன்று முதல் குதூகல ஆரம்பம்

சுப்பர் ஸ்ரார் ரஜனி காந்த்

கவர்ச்சிப் புயல் நக்மா

ரகுவரன், ஜனகராஜ், விஜயகுமார்,

சத்தியப்பிரியா, செண்பகா, யுவராணி, சரண்யா

நடித்த

★ பாட்ஷா ★

( புதிய வெளியீடு )

புதிய நேரம்:- 10-30, 2-00, 5-00

(சி/3971)



யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: 28-06-98 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி (இலங்கை நேரம்)

இடம்: பாடசாலை மண்டபம்

தலைமை: அருட்செல்வி G. செல்வராணி A. C. (அதிபர்)

அனைவரையும் தவறாது பங்கு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலை அ. சங்கம்
09-06-98

(சி/3985)

க. தேவராசா
செயலாளர்


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நகுலாம்பிகை வைத்திலிங்கம்

இளைப்பாறிய ஆசிரியை திருமதி நகுலாம்பிகை வைத்திலிங்கம் 9-6-98 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற ஞானமலர், காலஞ் சென்ற நவரட்ணம், குணரட்ணம், சகுந்தலாமலர், தவரட்ணம், ஜெபரட்ணம், காலஞ்சென்ற ஜெயரட்ணம், றோஸ்மலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குணநாயகம், பாக்கியராணி, ஜெயதேவி, முத்தையா, இன்பஜோதி, தேவதயா, ஜெபராஜன் ஆகியோரின் அன்பு மாமியும், செல்லையா, காலஞ் சென்ற திருமதி தியாகராஜா, திருமதி பஞ்சாட்சரம் மற்றும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சினி, ரஞ்சன், சுகி, வினோ, சுகந்தன், மணி, நிரு, பிறேமன், பிறேமி, நிம்மி, ஜெபி, ஜோதி, குமார், குமாரி, ரூபிணி, சொரூபிணி, ஜோதினி, ஜெசிக்கா, றெபேக்கா, அல்பிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரஞ்சித், சாம், ரூபன், நிசாந்தி, கிறிஸ்றி, சுஜாத்தா, சாள்ஸ், ஜோயல், றொமோனா, றெவின், ஜெஷ்சூரன், நிஷ்சூரன், பெஞ்சமின், நிக்கெலஸ், தனுஜா, ஒஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-06-98) புதன் கிழமை பொறள, ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நல்லடக்க ஆராதனையின் பின்னர் பிற்பகல் 4-00 மணிக்கு கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
வை. தவரட்ணம்
(மகன்)

65, ரணஜெயகம,
தெஹிவளை,
தொலைபேசி, 077-311772:

(சி/3984)

## சிற்றம்பலம் சிறீகணேசலிங்கம்

(தபால் அதிபர், வட்டுக்கோட்டை)

அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிற்றம்பலம் சிறீகணேசலிங்கம் 09 — 06 — 1998 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலாம்பிகையின் அருமைக் கணவரும், உஷாநந்தினியின் (மாணவி, ஆண்டு 11 யாழ்ப்பாணக் கல்லூரி), அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-6-98) புதன்கிழமை பகல் 11. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துத்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி நகுலாம்பிகையும்
மகளும்

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை,

(56759)

# அடையாளம் காணப்பட்டார்

நெல்லியடி, ஜூன் 10

வல்லிபுரக் கோயில பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் மணற்காடு குடத்தனையைச் சேர்ந்த கடற்றொழிலாளியான செல்லத்துரை யோகராசா (வயது 35) என நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜாவின் உத்தரவின் பேரில் நேற்றுக் காலை மந்திகை மருத்துவமனையில் நடைபெற்ற மரணவிசாரணையின் போது இறந்தவரின் சகோதரரான யோகராசா திருச்செல்வம் (வயது 37) சடலத்தை அடையாளம் காட்டினார்.

(உ-109)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
பாசமலர்

வியாழன், வெள்ளி
பிரசாந்த் - சங்கவி
கவுண்டமணி, செந்தில்
மன்னவா

நேரம்:- 10-00, 2-30
(பழைய நேரம்)

Tele. No. 070 - 212223

(56651)



## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

10 - 06 - 98 புதன்
அகல வெண் திரையில்
ரஜனி - குஷ்பூ
ஜனகராஜ் நடித்த
பாண்டியன்
( CD வெளியீடு )

காட்சிகள்:- 10-30, 2-30

(56751)



## 2000 - A/L

## தமிழ்

ஆரம்பம்: 1998-06-12

ஆசிரியர்
மாவை- லிங்கம்

★ விக்னா (யாழ்ப்பாணம்)
★ ஈசன் (கோண்டாவில்)
★ வினைல்ஸ் (சுன்னாகம்)
★ நாதன்ஸ் (சண்டிலிப்பாய்)
★ சித்திவிநாயகர் (மல்லாகம்)
★ ஐடியல் (காரைநகர்)
★ கலைமகள் (ஏழாலை)
★ சைன் (உடுவில்)

கல்வி நிலையத்தில் நேரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-6752)



## புலமைப்பரிசில்

07 - 06 - 98 (ஞாயிறு)
09 - 06 - 98 (நேற்று)
திகதிகளில் நடைபெற்ற

புலமைப் பரிசில்
பயிற்சி வினாத்தாள்களை
பெற்றுக் கொள்ளலாம்.

BOND

(56760)


# ஆமை இறைச்சி உண்ட மற்றொருவர் சுகவீனம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

புங்குடுதீவில் ஆமை இறைச்சிக் கறியை உண்டவர்களில் மேலும் ஒருவர் வாந்தி, மயக்கத்திற்குள்ளாகி நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரந்தனையைச் சேர்ந்த லோறன்ஸ்டிலக்ஸ் (வயது 28) என்பவரே நோய்வாய்ப்பட்டிருப்பவராவார்.

இச்சம்பவத்தில் இவருடன் இதுவரை 10 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்; மூவர் மரணமடைந்துள்ளனர்.

(உ-15)

உ

தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் தில்லையம்பதி

அருள்மிகு

## ஸ்ரீ சிவகாமி அம்பாள்

திருக்கோயில்

(இன்று) வைகாசி

## மஹோற்சவ பூங்காவன விஞ்ஞாபனம்

கோண்டாவில் தில்லையம்பதியில்

இன்று



## பூங்காவனத் திருவிழா

பரந்தெழுந்த சமண் முதலாம்
பரசமய விருண் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளி விளங்க
அரந்தை கெடப் புகலியர்
கோனமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி
பூங்கழல் போற்றி!

இன்று 10-06-98 மாலை அம்பாள் விஷேட பூந்தண்டிகையில் தெரு வீதிஉலா வருதலும் அதனைத் தொடர்ந்து மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நிகழ்ச்சி நிரல்:

மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டியில் பங்கு பற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நடைபெறும். விசேட நிகழ்ச்சியாக

**ஈழ நல்லூர் அருணா இசைக் குழுவினரின் இன்னிசைக்கானங்கள் இடம்பெறும்.**

நன்றி!

இந்து இளைஞர்கள்
கோண்டாவில்.

(56754)


## JAFFNA REHABILITATION AND RESETTLEMENT PROGRAMME

(JRRP)

Computing Professionals Wanted

2 Dynamic, energetic people required for the purpose of supporting and training a staff of 12 people. Must be proficient in English and have experience in Windows 95, Microsoft office, be able to work with databases and perform basic support on hardware. Training will be provided for the identified candidates. Interviews will be held on Thursday, June 11th 98 from 9.30 a.m onwards. Please bring Bio-data.

JRRP Office,
125, Temple Road,
Jaffna.

(56756)


# OBITUARY

## ALICE GNANAMALAR BALASANTHIRAN

Beloved wife of late T. Balasanthiran, ritired Additional Government Agent, mother of Jesuranayagam, Godwin, Dr. Arunthathy, Jayadav, Damayanthi, Suganthi and Sis. Vasanthy and mother - in - law of late Dr. Karuna, Lalitha, Sarvananthan, Alex and Sahan and grand mother of Suren, Deborah, Luckshila, Pricilla, Shomala, Jesuran, Haren, Naomi, Nagulan and Dilhara entered glory in Australia.

Informant:
ALEX THAMBIRAJAH

158, Old Park Road,
Chundikuli.

(56757)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு வெடிப்பு பரிசோதனை குறித்து
# கோபி அனானுக்கு இந்தியா விளக்கம்

புதுடில்லி, ஜூன் 10
இந்திய அணுவெடிப்புப் பரிசோதனை நடத்தியதற்கான காரணத்தை விளக்குவதற்காக இந்திய திட்ட கமிஷனின் துணைத்தலைவர் ஜஸ்வத் சிங் ஐ. நா தலைமைச் செயலர் கோபி அனானை சத்தித்துப் பேசி உள்ளார்.

போதை மருத்துத் தடுப்புக் குறித்த ஐ. நா. பேரவையின் சிறப்புக் கூட்டத் தொடரில் கலந்து கொன்வதற்காக ஜஸ்வத்சிங் இப்போது நியூயோர்க் சென்றுள்ளார்.

அணு வெடிப்பு பரிசோதனைகளை அடுத்து விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை சமாளிப்பதில் ஆதரவு திரட்டுவதற்காக 300 பேர் கொண்ட வெளிநாட்டு இந்தியர்கள் குழு ஒன்றையும் ஜஸ்வத்சிங் சத்திக்கவிருக்கின்றார். (இ-8)

## இஸ்ரேல் உதவி

காபூல், ஜூன் 10
வட ஆப் கானிஸ்தானில் அண்மையில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் உயிர் தப்பியவர்களுக்கு ஒரு விமானம் நிறைந்த போர்வைகள், கூடாரங்கள் மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை இஸ்ரேல் அனுப்பியுள்ளது. (இ-ரி)

## பாகிஸ்தானுடன் பேசுவதற்கு இந்தியா விருப்பம்

புதுடில்லி, ஜூன் 10
காஷ்மீர், அணு ஆயுதம் உட்பட இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசனை நடத்தும் பொருட்டு, கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த தான் விரும்புவதாக இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

எனினும் பாகிஸ்தானுடன் நடத்தும் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் வெளிநாட்டுத் தலையீடு எதற்கும் இடமே இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுடனான தனது தகராறுகளைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் அவசியம் என்று பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது. (இ-5)

## பயணிகள் உயிர் தப்பினர்

தைப்பே ஜூன் 10
பிலிப்பீன்ஸ்நாட்டிலிருந்து தாய்வானின் தலைநகர் தைபேக்கு புறப்பட்டுச் சென்ற ஈவாஎயர் விமானம் ஓடுதளத்திலிருந்து கிளம்பியதும் அதன் இயந்திரத்தில் தீப் பிடித்துக் கொண்டது.

இதனால் இந்த விமானம் மணிலா சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

பயணம் செய்த 222 பயணிகள் மற்றும் 14 விமானப் பணியாளர்கள் காயம் எதுவுமின்றி தப்பினர். (இ-8)

## வீதி சேதம்

சுன்னாகம், ஜூன் 10
தெல்லிப்பழை அம்பனைச் சந்தியையும், அளவெட்டி அலுக்கைச் சந்தியையும் இணைக்கும் கூட்டுறவாளர்வீதி மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாதபடி சேதமுற்றிருக்கின்றது.

கடந்த ஐந்து மாதங்களாகக் கற்கள் போடப்பட்டுள்ள போதும் இதுவரை திருத்த வேலை எதுவும்செய்யப்படவில்லை, அத்துடன் கற்கள் சிதறிப் போக்குவரத்துக்குத் தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அளவெட்டி, இளவாலை, பன்னாலைப் பிரதேச மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதாகவும் வீதி திருத்தப்படுமானால் பஸ் போக்குவரத்தைநடத்த முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

### பாகிஸ்தானின் அணு ஆற்றல்
# இஸ்லாமிய குண்டென வர்ணிக்க வேண்டாம்
## நவாஸ் ஷெரீப் கோரிக்கை

இஸ்லாமபாத், ஜூன் 10
பாகிஸ்தானின் அணு ஆயுதம் தயாரிக்கும் ஆற்றலை ''இஸ்லாமியக் குண்டு'' என வர்ணிக்கக் கூடாது.

இப்படி பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் அணுவெடிப்புச் பரிசோதனைகளுக்கும், மதத்துக்கும் எந்தத் தொடர்பும்இல்லை என்றும்—

இந்த இரு விடயங்களையும் ஒன்றாக வைத்துக் குழப்ப வேண்டாம் என்றும்—

சவூதி அரேபியாவுக்கான தனது விஜயத்தின் போது பேசுகையில் நவாஸ் ஷெரீப் கூறினார்.

அணு ஆயுதம் தயாரிக்கும் பாகிஸ்தானின் திறமையை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எண்ணம் பாகிஸ்தானுக்கு இல்லை என்றும் ஷெரீப் தெரிவித்தார்.

''இஸ்ரேலின் அணு ஆயுதங்களுக்கு ஈடுகொட்டும் வகையில் தற்போது பாகிஸ்தானிடம் அணுகுண்டு ஒன்று உள்ளது. ஆதலால் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் இப்போது கூடுதல் நம்பிக்கையுடன் இருக்கின்றன'' என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் கமால் கராசி கூறியதைத் தொடர்ந்து நவாஸ் ஷெரீப்பின் இந்தக் கூற்று வந்துள்ளது. (இ-8)

## அணு மின் நிலையம் குறித்து சர்ச்சை

வியன்னா, ஜூன் 10
ஆஸ்திரிய எல்லையிலிருந்து 120 கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு சர்ச்சைக்குரிய அணு மின் நிலையத்தை இயக்கியிருப்பதற்காக ஸ்லோவேக்கியாவை ஆஸ்திரியா கடுமையாக விமர்சித்துள்ளது.

இதே சமயம் மேம்படுத்தப்பட்ட ஒரு சோவியத் வடிவமைப்பான இந்த அணு மின் நிலையம் பாதுகாப்பானது என்று சோவியத் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (இ-8)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**செல்லையா குமாரசாமி**
(பரிபாலனசபை உறுப்பினர்)


ஊர்போற்ற உத்தமனாகி உயர்வாகி நின்றோனே
பற்றறுத்து ஒரு திங்கள் சென்றிடினும்
உம் நினைவே எம் நெஞ்சை என்றென்றும்
வருடுதையா,
முருகன் தொண்டனாய் முன் நின்று உழைத்த
உன்னை தன்பாதம் அழைத்திட்டான்
உன்ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அரசோலை விநாயகனையும், முருகப்பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபையினர்
கோ/மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமிகோயில்
(56745)

---

## 31ஆம் நாள் நினைவாராதனை

10 - 06 - 1998



தோற்றம்
30 - 04 - 1948

மறைவு
11 - 05 - 1998

அமரர்
**குணசாமி தங்கராசா**
(உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு)

குடும்பத்தின் ஒளி விளக்கே
பாசத்தின் உறைவிடமே
ஒழுக்கத்தின் சீலனே ஒப்பிலா மணியே
வேம்பினைச் சாட்டாக வைத்து
போதும் வையத்து வாழ்க்கையென்று
வேதனையில் ஆழ்த்திவிட்டு
பொன்னுலகம் சென்றனையோ?
பொறுககுமோ எங்கள் நெஞ்சம்
பொங்கி வெடிக்குதையா
போராடித் தவிக்குதையா
உன் பொன்னான முகங் காண
பொறுமையிழந்து நிற்கின்றோம்
உன் பால் வண்ண முகங் காணப்
பறந்தோடி வருவாயோ!

மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், மாமன், மாமி,
மைத்துனிமார், மைத்துனர்மார்,
மருமக்கள், பெறாமக்கள்

தகவல்: ப. பார்த்தீபன்
(66743)

---


**A/L 2000**
(கலை, வர்த்தகம்)
06 - 06 - 98 அன்று
ஆரம்பமாகிவிட்டன.
புதிய
உயர் கல்லூரி
[illegible]
[illegible]
(56742)


---

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேசசபை ஊழியர்
ச. இராசநாயகம்
அவர்களின் அன்புத் தந்தையார்
**ச. மயில்வாகனம்**

அவர் ளின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயறுரும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும்தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தலைவர், செயலாளர்,
உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள்.
நல்லூர் பிரதேசசபை
திருநெல்வேலி.
(56749)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா குமாரசாமி**

11—05—98 இல் சிவப்பேறு எய்திய எங்கள் குடும்பத் தலைவர் திரு. செல்லையா குமாரசாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள மனைவி, மக்கள்,
மருமக்கள், பிள்ளைகள்.

மஞ்சத்தடி,
இணுவில்,
(56747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்காயச் செய்கையில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜூன் 10 வெங்காயச் செய்கையில் தற்போது வடபகுதி விவசாயிகள் ஆர்வங் காட்டி வருகின்றனர். பல இடங்களில் வெங்காய நடுகை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மே மாதத்தில் மட்டும் 140 ஹெக்டேயரில் வெங்காயம் நடுகை செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இம்முறை 650 ஹெக்டேயரில் வெங்காயச் செய்கை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

## மானிப்பாய் சிறுவர் பூங்காவில் நூல் நிலையம், சிறுவர் பாடசாலை

சண்டிலிப்பாய், ஜூன் 10 மானிப்பாய் பிரதான வீதியிலுள்ள சிறுவர் பூங்காவில் சிறுவர்களுக்கான நூல் நிலையம் ஒன்றும், பாலர் பாடசாலையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு முன்னோடியாக இப்பகுதியிலுள்ள ஆறு கிராம அலுவலர்பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் கடந்த 31 ஆம் திகதி சிறுவர் பூங்காவை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

ஓய்வு பெற்ற அதிபரும், உயரப்புலம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவருமான நா. சிவபாதம் தலைமையில் இச்சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

(இ-135)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சுப்பிரமணியம் தனபாலசிங்கம்

உரிமையாளர் சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி

மொட்டாக அன்னை மடியில்
22-06-1956

சருகாக அவனடியில்
11-05-1998

திதி 10-06 1998

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு
அரவணைக்க அன்பான உள்ளங்களுண்டு.
ஆனாலும் அப்பா, என்றழைக்க நீங்கள் இல்லையே!
கேட்பவர்க்கு இல்லை எண்ணாது கொடுத்தீர்கள்
கேட்டுவிட்டான் உங்கள் உயிரை காலனவன்
மாதமொன்று ஆயிற்றே அன்பான அப்பாவே!
காலனுக்கு என்ன அவசரமோ
அன்புதனை அருவியாக்கி பண்புதனை சிகரமாக்கி
பார்போற்ற வாழ்ந்திட்ட பாசமிகு தந்தையே!
ஊருண்டு உறவுண்டு உற்றாருண்டு
ஊக்கந்தர நீயிருந்தால் உறக்கமும் இருக்குமன்றோ
பார்போற்ற வாழ்ந்தீர்கள் பலசேவை செய்தீர்கள்
நேர்கொண்ட பார்வையிலே நிமிர்ந்துதான் நின்றீர்கள்
ஊர்வாழ வாழ்ந்தீர்கள்
உத்தமனாய்த் திகழ்ந்தீர்கள்
எவரும் காணாத
தந்தையை நாம் கண்டெடுத்தோம்
பலரும் போற்ற வாழ்ந்தோம்
வாழ்ந்த வாழ்வையும் நினைக்கின்றோம்
நீங்கள்தான் இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டீர்களே
அன்பான அப்பாவே ஆவியுலகில் இருந்து
ஆறுதல் அளித்திடுங்கள் எங்களுக்கு.

எங்கள் குலவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மலர் வளையங்கள் சாத்தியும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும் நன்றி கூறும் இவ்வேளையில் 10-06-98 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருந்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், தந்தை, தாய், சகோதரர்கள்.

பொற்பதி றோட், கொக்குவில்.

(56730)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித பாட விசேட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 10 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் விசேட செயலமர்வு வகுப்புக்கள் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் மேற்படி பாடசாலையில் அமைந்துள்ள கணித மூலவள நிலையப் பொறுப்பாளர் ச. இராமகிருஷ்ணாவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)

## இணையத்தின் புதிய தலைவர்

யாழ்ப்பாணம் ஜூன் 10 யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் புதிய தலைவராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடாதிபதியான பேராசிரியர் வி. கே கணேசலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் தலைவராகவும், யாழ். விஞ்ஞான சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

## தொலைபேசி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10 யாழ்ப்பாணக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு விழாவுக்கு முன்னதாக அக்கல்லூரிக்கு தொலை பேசி இணைப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ரெலிக்கொம் நிறுவனத்தையும், வட பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவையும் கேட்டுள்ளது.

(இ-5)

## புவியியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10 சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கான புவியியல் கருத்தரங்கு இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலையின் ஜி.சீ.ஈ உயர்தர மாணவர் மன்றத்தினர் ஒழுங்கு செய்துள்ள இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். ரீ. பீ இராஜேஸ்வரன் ''நிலஅளவையும் எறியங்களும்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

(இ-ரீ)

# திட்டங்களை செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளூராட்சிச் சபைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, உள்ளூராட்சிச் சபைகளுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படடும் இது வரைபெரும்பாலான உறுப்பினர்கள் பதவி ஏற்காததினால் குறிப்பிட்ட உள்ளூராட்சிச்சபைகளினால் திட்டங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் இருப்பதாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி நடத்தப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூராட்சிச் சபைகளுக்கான செயற் திட்டங்கள் யாவும் அந்தந்த உள்ளூராட்சிச்சபைத் தலைவர் அடங்கிய குழுவினராலேயே சிபார்சு செய்யப்படல் வேண்டுமென வடக்கு — கிழக்கு மாகாண சபை 18-02-98 ஆம் திகதிய சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தி இருந்தது.

ஆனால் இது வரை பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகளில் தலைவர், உப தலைவர் உட்பட பெரும் எண்ணிக்கையான உறுப்பினர்கள் தமது பதவியைப் பொறுப்பேற்கவில்லை.

இதனால் கடந்த வருடம் முன்மொழியப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள போதும், அந்த நிதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஒரு சில உள்ளூராட்சிச் சபைகளில் ஒரு சில உறுப்பினர்கள் மட்டுமே பதவியேற்றுள்ளதால் ''கோரம்'' இல்லாத காரணத்தால் குறிப்பிட்ட சபைகள் கூட்டங்களை நடத்தவோ அல்லது செயற் திட்டம் ஒன்றை சிபார்சு செய்யவோ முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-7)

## அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் உதவும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரு பாடசாலைகளினதும், மருந்தகம் ஒன்றினதும் புனரமைப்புக்கென நிதிஉதவிகளை வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் றோ.க.த. பாடசாலை, நல்லூர் ஆனந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் புனரமைப்பிற்கெனவும். கோண்டாவில் கிழக்கில் உள்ள மருந்தகத்தினது புனரமைப்புக்கெனவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## தணிக்கையின் பின்னணி புரியாத புதிராக உள்ளது!

### டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

செய்தி ஊடகங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள செய்தித் தடைக்கான காரணம் புரியாத புதிராகவே உள்ளது.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

செய்தித் தடை தொடர்பாக பி. பி. ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் கூட இந்த செய்தித்தடை மறைப்பதாக இருக்கலாம்.

தற்போதைய அரசு இது போன்ற நடவடிக்கைகளை எதிர்த்துப்பிரசாரம் செய்தே பதவிக்கு வந்தது. அந்த வகையிலேயே இது புரியாத புதிராக உள்ளது.

இது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்த, கண்டிக்க உள்ளோம். அதே நேரம் இது எந்த அளவுக்குத் தமிழ் மக்களைப் பாதிக்கும் என்பதைப் பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க உள்ளோம் — என்றும் திரு. தேவானந்தா அப்பேட்டியில் கூறினார்.

(ஐ-9)

## அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலய திருக்கோபுர நிர்மாணத்திற்காக அடிக்கல் நடப்பட்டுள்ளது.

(இ-ரி)

## பொதுத்துறை ஊழியரின் ஆளணி மதிப்பீடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

அரச, அரச சார்புத் துறை ஊழியரின் ஆளணி மதிப்பீடு யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கிறது.

மத்திய, மாகாண அரசுகளின் கீழ் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்கள், நியதிச்சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரச - தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் சகல ஊழியர்களும் இந்த மதிப்பீட்டைச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு செய்யும் படிவங்களை திணைக்களங்களின் இணைப்பாளர்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக மாவட்ட புள்ளி விவர உத்தியோகத்தரிடம் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3-100)

★ குதூகல ஆரம்பம் ★

**உதயா**

**வெண்திரை அரங்கம்**

அகல வெண் திரை

சுன்னாகம் வீதி, புத்தூர் மேற்கு, புத்தூர்.

நிகழும் வெகுதானிய வருடம் வைகாசி 27ஆம் நாள்

காலம்: 10 - 06 - 98 புதன்கிழமை

இன்று காலை 10-48 மணி தொடக்கம் 11-36 வரை உள்ள சுபமங்கள வேளையில் ''சிறீ அமலா'' உரிமையாளர் சிறீதரன் அவர்களால் திரை நீக்கம் செய்யப்படும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

முதற்காட்சி ஆதிபராசக்தி (நேரம் 11 மணி)

இரண்டாம் காட்சி சூர்யவம்சம் (நேரம் 2-45 மணி)

குறிப்பு: பெண்களுக்கான ஆசனம் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர்: K. தம்பிமுத்து (56733)

UNIVERSITY OF JAFFNA

**Post of Stenographer**

(On Contract)

Applications are invited from suitable candidates upto 6th July 1998 for the Post of Stenographer Grade - II (English) on Contract / Assignment basis. Applicants from Government Departments, State Corporations and Statutory bodies may be considered for secondment services.

Salary:

Negotiable

Qualifications:

a. G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in three subjects including (English)

and

b. Proficiency in English Stenography with the following minimum speeds.
Shorthand — 80 w.p.m
Typing — 30 w.p.m

c. At least 5 years working experience in a Department/ Company.

Selection:

By test & Interview.

All applicants should send in their application (self prepared) to the Registrar, University of Jaffna.

The applications receved after the closing date and the applications on which the particulars are stated illegibly will be rejeceted.

- Registrar

University of Jaffna,
Jaffna.
08-06-1998

(C/3978)

**யா/உடுப்பிட்டி**

**அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

பழையமாணவர் சங்கம் நடத்தும்

முன்னாள் தலைவர்

பேராசிரியர்

**அழகையா துரைராசா**

அவர்களின்

**நான்காவது நினைவஞ்சலிக் கூட்டம்**

இடம்: உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பேராசிரியர் அழகையா துரைராசா ஞாபகார்த்த மண்டபம்.

காலம்: 11 - 06 - 1998 வியாழக்கிழமை முற்பகல் 9. 30 மணி

தலைவர்: Dr. மு. தங்கராசா

பிரதம விருந்தினர்: திரு. சி. தில்லைநடராசா (பழையமாணவர், செயலாளர், இந்துசமய கலாசார அமைச்சு)

நினைவுப் பேருரை: பழந்தமிழர் வாழ்வியலில் நிலம்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.)

நினைவுப்பரிசில் வழங்கல்:

மேற்படி நிகழ்விற்கு தவறாது சமுகந்தந்து சிறப்பிக்குமாறு பேராசிரியர் துரையின் அபிமானிகள் வேண்டப்படுகின்றனர்.

- பழைய மாணவர் சங்கம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
உடுப்பிட்டி. 01-06-98. (56657)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் சி. சுஜீந்திரன்**

(முகுந்தன்)

(G. C. E. A/L, நெல்லியடி M. M. V.)

பிறப்பு 03 — 03 — 1971 இறப்பு 10 — 06 — 1992

கலைக்கோலத் தரிசனங்கள் சுஜீந்திரா
கானல் நீராயிற்றே
மலைக்கோல மாண்புயிரே முகுந்தா
மனம் நிறைந்த காவியமே!
தலைக்கோலத் தவவுருவே எங்கள் உயிர்தாங்காத்
தெய்வீகமே!
நிலைக்கோல விண்ணுலகில் நிலையாக நீ என்றும்
வாழி வாழி

உங்கள் பிரிவால் துயருறும்:
பப்பா, மம்மி, தம்பிமார், தங்கை,
அம்மம்மா, அன்ரிமார், மாமாமார்,
சித்தப்பாமார் மற்றும் நண்பர்கள்.

''திருமகள் வாசா'' வட்டுவத்தை
அல்வாய் கிழக்கு. (56659)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

தர்மலிங்கம் தர்மசீலன் என்பவரது விசேட அடையாள அட்டை திருநெல்வேலிக்கும் யாழ். நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்: பழைய புகையிரத நிலைய வீதி, கொக்குவில். (56728)

அளவெட்டி திருநாவுக்கரசு விவேகானந்தன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (55437)

## விண்ணப்பப் படிவம்

சங்கீத, நடன, சித்திர ஆசிரியர் பதவிக்கான படிவமும் விவரமும் விற்பனையாகிறது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (55431)

## மணமக்கள் தேவை

அரசடாக்டர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள், தனியார் துறை உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு கௌரவ பதவி மணமகன்களும் முன் சொல்லப்பட்ட பதவிகளில் மணமகள்களும் தேவை. ஆரம்பப் பதிவுக்கட்டணம் எதுவுமில்லை. ஜாதக குறிப்புடன் தொடர்பு:- 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (56716)

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட அழகிய கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. 12 மணியிலிருந்து தொடர்பு கொள்ளவும் A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை, (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை) (56718)

## O/L MATHS

ஒரே அமர்வில Distinction, Credit பெறுபேறடைய இதுவரையும் சித்தியடையாதவர்களும், புதியவர்களும் ஆரம்பத்தில். இருந்து வாரம் தோறும் 5 மணித்தியாலம் கற்பிக்கப்படுவர். ஆசிரியர் இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (56724)

## விவசாய சம்மேளன கூட்டம்

வலி. தென்மேற்கு, ஜூன் 10

உடுவில் கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கமநல மண்டபத்தில் நடைபெறும்.

இதில் கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட சம்மேளனங்களின் தலைவர் செயலாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ.185)

## ஜே - 109 கிராமசேவகர்

நல்லூர் சங்கிலியன் தோப்பு (ஜே - 109) கிராம அலுவலராக எஸ். ஜே. செல்லத்துரை இந்த மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்,

கடந்த மூன்று மாதங்களாக இக்கிராம அலுவலர் பிரிவுக்கு நிரந்தர கிராம உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காததால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். (இ-7)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்

### அப்புக்குட்டி வினாசித்தம்பி

(மிருசுவில்)

தோற்றம்: 11—05—1945


மறைவு: 11—05—1998

எமது நண்பர் வி.சிவகுமார் (B.Com) மற்றும் வி. சிவரஞ்சினி, வி. சிவநிதி, வி. மதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி வி.நாகம்மாவின் அன்புக் கணவருமான அப்புக்குட்டி வினாசித்தம்பி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.
(பளை)

(சி/3959)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



பிறப்பு 15 — 05 — 1954

இறப்பு 15 — 05 — 1998

அமரர்

### துரைச்சாமி சிவகுமாரன்


இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி 11. 06- 98 வியாழக்கிழமை காலை 7. 00 மணிக்கும், வீட்டுக் கிருத்தியம் காலை 10. 00 மணிக்கும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்று மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றி மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தந்தை, தாய், மனைவி,
துரைச்சாமி- சரோஜினிதேவி
திருமதி நா. சிவகுமாரன்.

698/ 5, சபாபதி லேன்,
தலையாழி,
வண்ணார்பண்ணை.

(56741)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கனகசபாபதி சத்தியநேசன்

(மாவட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்)
வல்வெட்டித்துறை

தோற்றம்: 15 - 04 - 1970

மறைவு; 23 - 05 - 1997

திதி - அபரபக்க பிரதமை

ஆண்டொன்று போயுமிங்கே ஆறவில்லை
நெஞ்சமது!
மீண்டிங்கு வருமென்று மகளிங்கே கேட்கிறாளே!
ஆண்டவனும் உனையங்கு அழைத்திட்ட
காரணத்தால்,
ஆண்டு தோறும் உன் நினைவு ஆலமரமாய்
வளருதையா!

உங்கள் நினைவை மறவாத
மனைவி மகள் குடும்பத்தினர்.

கலாஞ்சலி,
அல்வாய்.

(56722)

## 31ஆம் நாள் நினைவலைகள்

திருமதி

### பொன்னு செல்லாச்சி

தோற்றம் 10—10—1949

மறைவு 11—05—1998

சங்கத்தின் முன்னாள் பணியாளர் ஆ. பொன்னு அவர்களின் அன்பு மனைவியும், சங்கத்தின் முன்னாள் பொதுமுகாமையாளர் திரு. க. தம்பிராசா, தற்போதைய பணியாளர்கள் க. சின்னத்துரை, க. கனகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. பொ. ரகுநாதனின் பாசமிகு தாயாருமான

திருமதி பொன்னு செல்லாச்சி

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கிறோம்,

அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
பணிப்பாளர்கள்,
ப. தெ. வ. அ. கூ. சங்கம்,
பளை.

(சி-3958)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை சரவணமுத்து

(ஓய்வுபெற்ற பரிசாரகர்
அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி)

மலர்வு 05 — 06 — 1928

உதிர்வு 11 — 05 — 1998

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் இருந்து- எமது இதயத்தில் குடிகொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் திடீரென எம்மை ஆறாத்துயரில், ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கும்.


சகோதரர்கள், மருமக்கள்.
மக்கள், பேரப்பிள்ளைகள்,

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(56711)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

10 - 06 - 1998



தோற்றம் 22 — 04 — 1934

மறைவு 11 — 05 — 1998

அமரர்

### இரத்தினம் சண்முகம்

அன்பின் திருவுருவமே
அமைதியின் உறைவிடமே
குடும்பத்தின் ஒளி விளக்கே
எமைக் காத்த தெய்வமே!
தனிமையில் நாம் வாடுகின்றோம்
ஈந்துவக்கும் இன்பமதை
இயல்பாகக் கொண்ட எம் தாயே
இனி எப்போ உமைக் காண்போம்?

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இன்று எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

57, மருதடிவீதி,
யாழ்ப்பாணம்.

(56738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னெறிகள் பலவும் நிறைந்திருக்க பலியிடும்இழிவானசெயல்வேண்டாம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் நமது சைவசமயம் பல்வேறு வழிபாட்டு முறைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இவ்வழிபாட்டு முறைகள் மக்கள் வாழ்கின்ற சூழல், மக்களின் நம்பிக்கை அவர்களின் அறிவுடைமை போன்ற பல்வேறு அக — புறக்காரணிகளால் வேறுபட்டு அமைகிறது. எமது வழிபாட்டுக்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற நூல்களாக வேத சிவாகமங்கள், திருமுறைகள், இதிகாச புராணங்கள் என்பன விளங்குகின்றன.

கற்காலம் முதல் இன்றைய இருபதாம் நூற்றாண்டுவரை மனிதகுல வரலாற்றை நோக்கும் போது நாகரிகம், பண்பாடு என்பன வளர்ச்சியடைந்துள்ள நிலையில் மனிதனுடைய வாழ்க்கை முறையிலும் பல்வேறு முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

நாகரிகம் வளர்ந்த இக்காலகட்டத்தில் அண்மையில் சமயத்தின் பெயரால் நடைபெறும் உயிரினங்களை ஆலயங்களில் பலியிடும் நிகழ்ச்சி இந்துக்கள் மனத்தைப் புண்படுத்துவதோடு அனைவரினாலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகவும் உள்ளது.

### முக்கிய தர்மங்கள்

இறைவன் அன்பு வடிவினன். அன்பே சிவம் என்பார் திருமூலர். எமது சமய இலக்கியங்களான கீதை, திருமந்திரம் என்பனவும் அற இலக்கியமாகிய திருக்குறளும் மக்களின் வாழ்வியல் ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறுகின்றன. எமது சமயஞ் சார்ந்த ஒவ்வொருவராலும் அன்பு, உயிர்கள் மேல்பற்று (ஜீவகாருண்யம்) ஒழுக்கம் என்பன பின்பற்றப்பட வேண்டிய முக்கிய தர்மங்களாகும். சமயங்கள் அற வாழ்வையே போதிக்கின்றன. சமய நூல்களிற் கூறப்பட்ட அடிப்படைச் சமய நெறியைப் பின்பற்றி சமய வாழ்க்கை வாழாத ஒருவன் சமயத்திலிருந்து பிறழ்ந்தவனாகவே கருதப்படுகிறான்.

ஒவ்வொரு சமயியும் தம்மைச் சுயபரிசோதனை செய்து உண்மைச் சமயநெறியில் தாம் வாழ்வதற்கு திடசங்கற்பம் செய்தல் வேண்டும். சமய அறிவு நூல்களைக் கற்க வேண்டும். சமயத்தின் பெயரால் நடைபெறும் பலியிடுதல் போன்ற செயல்களையும் களைதல் வேண்டும். அறிஞர்களையும் உயர் சமய நிறுவனங்களையும் கலந்தாலோசித்து மக்களினுடைய பண்பாடு மனித நேயம், உயிர்களின் மேல் பற்று தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிக்கும் பண்பு, அறம், ஒழுக்கம், தானம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளக் கூடிய சடங்குகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

### உயிர் காக்கும் பண்பு

சங்கத் தமிழ் இலக்கியங்களும் உயிர்வதையைக் கண்டிக்கின்றன, போரின் போது

> ஆலயங்களில் பலியிடுதல் சைவசமய நல்லறங்களுக்கு ஒவ்வாதது. அதனைக் கைவிடக் கோரி இலங்கை இந்து குருமார் ஒன்றியம் விடுத்த அறிக்கை இங்கு கட்டுரை வடிவில் பிரசுரமாகிறது.

கூட ஆவணத்தைக் காக்கும் பண்பு பற்றியும் பாவம் செய்வோரின் முதல் வரிசையிலே ஆவின் முலையை அறுத்த அறனில்லாதோரை வைத்து அவர்களைக் கழுவாய் செய்யும் மரபினையும் புறநனூறு எடுத்தியம்புகின்றது.

வேதங்களிலே பசு — அ—ஜ்னயா கொல்லப்படத்தகாதது எனப் போற்றிக் கூறப்படுகின்றது. பசுக்களைக் கொன்று தின்பவரைப் பாவிகள் எனச் சுந்தரரும் கூறுகிறார். ஆதி சங்கரரும் பிராணிகளைத் துன்புறுத்தி புகழும் செல்வமும் பெற்றுத் தனது பிறவியைப் பலனற்றதாகச் செய்து பின் நகர துன்பத்தை அனுபவிப்பதற்கு காரணமான வாமாசார வழிபாட்டு முறைகளைப் பின்பற்றக் கூடாது; அவை புறம்பானவை; தள்ளத்தகுந்தவை எனக் கூறியுள்ளார்.

நல்லைநகர் நாவலரும் பலியிடுதலைக் கண்டித்து ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்'' எனக் கூறியுள்ளார். திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகளும் எமது நாட்டில் பிற சமயத்தவரால் மேற்கொள்ளப்பட்ட பசுவதையை எதிர்த்துத் தமிழகம் சென்ற வரலாறு நாமறிந்ததே.

''நல்லாறு நல்லொழுக்கம் எனப்படுவது யாதெனின் யாதொன்றும் கொல்லாமை ஆகும் நெறி'' என வள்ளுவன் கூறுகிறான். மேலும் — ''நன்லாகும் ஆக்கம் யாதெனினும் சான்றோர்க்கு கொன்றாகும் ஆக்கம் கடை' என நன்மையைக் கருதியதாக செய்கின்ற செயல்களுக்காக கொல்லுதல் செய்யப்படினும் அது சான்றோர்க்கு உரிய இழிவான செயல் எனக் கூறுகிறார்.

### விரும்பிய பலன் கிடையாது

ஆறறிவு படைத்த மனிதகுலம் இறையின் பெயரால் தம் நன்மை கருதிச் செய்கின்ற உயிர்களைப் பலியிடுதல் முதலியன அருவருக்கத்தக்க செயல்கள் என்பது இதனால் உணரப்படும். மேலும் அவ்விதம் பலியிடுதல் முதலிய செயல்களைச் செய்தோர் தாம் விரும்பிய பலன்களை எய்தமாட்டார்கள். நோயுற்ற உடம்புடன் வறுமையோடு தீய வாழ்க்கையையே வாழ்வர்.

மேலும் கீதையும் ''சவாபூதானாம் அத்வேஷ்டர் மைத்ரக கருண ஏலச'' என நண்பனாய் கருணை உடையவனாய் எல்லா உயிர்களுக்கும் துவேஷமில்லாதவனாய் கடவுளுக்கு உகந்தவனாய் பக்தன் இருத்தல் வேண்டும் என அடியவர்களின் தன்மையை எடுத்துக் கூறுகின்றது. ஈரமுடையார் காண்பார் இணையடி என்பது திருமூலரது கூற்றாகும். அன்பு நெறி ஒழுகுபவரே இறைவனின் திருவடி நிழலையடைவர் என்பது எமது சமய நம்பிக்கை.

### உண்மைச் சமயிகளாக வாழ்வோம்

எமது சமயம் சரிகை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிமுறைகளைக் கொண்டது. கிரியை முறைகளுக்கு பக்தியே சாதனமாக அமைகின்றது. காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு இட்டுச் செல்லும் வழிகள் பல இருக்கும் போது அவற்றை உணர்ந்து அவை வழி நடப்போம்.

கண்ணீர் மல்க, கதறியழ விலங்குகளைப் பலியிடும் வழக்கத்தைக் கைவிட்டு கொல்லாமை, புலாலுண்ணாமை போன்ற நல்லறங்களைக் கடைப்பிடித்து உண்மைச் சமயிகளாக வாழ்வோம் என நாமனைவரும் திடசங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

இதுவே சமயத்தின் பெயரால் நாம் அனைவரிடமும் விடுக்கும் அன்பு சார்ந்த வேண்டுகோளாகும். ★

---

# உதயன்

## முன்னெடுப்பது எப்படி?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சியும் இழுபறிப்படுகின்றன; இழுத்தடிக்கின்றன என்பது இதுவரை பத்திரிகைகள் சுட்டிக் காட்டிய, கண்டித்த விடயமாகவே இருந்தது.

இந்த உண்மை இப்போது மிக வெட்ட வெளிச்சமாகத் தெரிவதால் அரசாங்கத்தில் பங்காளிகளாக உள்ளவர்களும் இது குறித்துக் கருத்தும் கண்டனமும் தெரிவிக்கத் தொடங்கி உள்ளனர்.

தீர்வு முயற்சியை முன்னெடுப்பதில் இரண்டு தரப்புகளுமே ஆர்வங் குன்றியுள்ளன. இந்த முயற்சியை எவ்வாறு பின்தள்ளி விடலாம் என்று போட்டி போடும் வகையிலேயே இரு சாரார்களினதும் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் அமைந்துள்ளன!

தாமதத்திற்கும் தடங்கலுக்கும் இரு தரப்பாரும் ஒருவரை மாறி மற்றவர் குற்றஞ் சாட்டுகிறார்களே அன்றி, நேரில் பேசி கருத்து முரண்பாடுகளையோ, தாமதத்துக்கான காரணிகளையோ நீக்குகின்றார்கள் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் ஒற்றையாட்சி, பதின்மூன்றாவது திருத்தம் என்ற இரண்டு வட்டங்களுக்கும் அப்பால் செல்ல அது விரும்பவில்லை. ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பது வேறு, ஒற்றையாட்சி வேறு என்பதனை அது இன்னும் உணர்வதாக இல்லை. தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவது தனிநாட்டுக்கு — இலங்கை பிளவுபடுவதற்கு — வழி செய்யும் என்ற மாயையில் இருந்து அது இன்னும் விடுபடவில்லை!

ஆகையால் அந்தக் கட்சி முழு விருப்பத்துடன் சந்திரிகாவின் தீர்வுப் பொதியை ஆதரிக்கப் போவதில்லை என்பதே யதார்த்தம். ஆனால் வெளியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனைக் குழப்பும் நோக்கம் தனக்கு இல்லை என்று காட்டிக் கொள்வதற்காக இழுத்தடிப்பு உத்தியைக் கையாள்கின்றது!

ஆளுங்கட்சியைப் பொறுத்தவரையில் நாள்கள் நகர நகர அதன் தீர்வு யோசனைக்குப் பல தரப்புகளிலிருந்தும் வலிமையான எதிர்ப்புகள் வருகின்றன. அவற்றை எதிர்கொண்டு நினைத்ததை முடிக்கும் துணிச்சல் ஆளுங்கட்சிக்கு இல்லை; காரணம்: இது விடயத்தில் மக்களின் பகைமையைத் தேடிக் கொண்டால் அரசியல் பலம் குன்றி விடும் என்பதாகும். அவ்வாறு செய்து கட்சியின் எதிர்காலத்தை நாசமாக்க ஆளுங்கட்சி விரும்பவில்லை.

அதனை வெளிக்காட்டாமல், போரினூடு சமாதானம் என்ற அர்த்தமற்ற செயற்பாட்டில் இறங்கிக் காலத்தைக் கடத்துகிறது; இழுத்தடிக்கிறது; அரசு!

இரு பக்கத்தாரினதும் இழுத்தடிப்புக் கதைகள் இப்படியிருக்க, தீர்வு யோசனை எவ்வாறு முன்னெடுக்கப்படும்? எதிர்காலம் கேள்விக் குறியே தான்!

---

## ஊன்றிக்கலந்த வரலாறு

அன்று ஆனித்திங்கள் பத்து
என்றுமே இல்லாத துயர்பட்டு
எம்மவர் முப்பத்தொருவர்
உயிர் துறந்த நாளன்றோ!

வெள்ளி அலைகளினூடே
மிதந்து சென்றவர்
அங்கம் பிளந்து ஆவிபிரிந்து
துஞ்சும் துயரைக் குருநகருக்கு
தந்து சென்றவர்களே!

அலைபாயும் கடல் நடுவே
வரங்கேட்டா போனீர்கள்
தரங்கெட்ட பகைவந்து
தலை சீவ, கால் பதித்த
இடமெல்லாம் செந்நீரின் சகதி

கடல்நீரும் கண்ணீரும் கலந்தது போல்
கடலிலே கலந்தது எம்மவர் செந்நீர்
அண்டை ஊராம் மண்டைதீவுக் கடலில்
அவர்கள் எழுப்பிய அவலக்குரல்களின் ஓசை
காற்றினிலே கலந்துவந்து கேட்கிறதே
எப்போதும்

கடல்வற்றிப் போனாலும்
கதை வற்றிப் போகாதே
மறைந்த 'தூயஒளி' இவ்வுலகினில்
ஊன்றிக் கலந்துவிட்ட உங்களின் வரலாறு!

- ராதாரமேஷ்

[குருநகரில் இருந்து 'தூயஒளி' என்னும் படகில் தொழில் செய்யச் சென்ற குருநகர் மீனவர்கள் 31 பேர் மண்டைதீவுக் கடலில் கொல்லப்பட்டனர். அந்தக் கொடுமை நடைபெற்ற பன்னிரண்டாவது வருடம் இன்று ஜூன் பத்தாம் திகதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## மருந்துக் கலவையாளர் பதவிக்கு விண்ணப்பம்

திருநெல்வேலி ஜூன் 10

மருந்துக் கலவையாளர்களாக பயிற்றுவிப்பதற்கு யாழ். சுகாதார திணைக்களத்திலும் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றிவரும் சிற்றூழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இது தொடர்பான சுற்றறிக்கையை யாழ். சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

ஐந்து வருடகால நிரந்தர சேவையைபூர்த்தி செய்து சேவையில் உறுதி செய்யப்பட்ட சிற்றூழியர்கள் இதற்கான கல்வித்தகைமையைப் பெற்றிருப்பின் மருந்துக் கலவையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும்— இதற்கான விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் ஊடாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் — சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துக் கலவையாளருக்கான வெற்றிடங்கள் பல நிரப்பப்படாது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-135)

## தேநீர்க் கடையில் திருட்டு

வலி தென்மேற்கு, ஜூன் 10

கடந்த 5ஆம் திகதி கோண்டாவில் டிப்போவுக்கு அருகிலுள்ள தேநீர்க்கடை ஒன்று இரவுவேளையில் உடைக்கப்பட்டு அங்கிருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (இ-8-185)

## திருத்தப்படாத பாலம்

நெல்லியடி, ஜூன் 10

துன்னாலை முறாவில் வீதியிலுள்ள ''புட்டுத்து'' பாலம் பல வருட காலமாக சேதமடைந்திருப்பதனால் இப்பகுதியால் பயணஞ் செய்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். (இ-109)

## நாளை

வைகாசி - 28
வியாழக்கிழமை
திதி: பிரதமை
முற்பகல் 10.48 வரை
நட்சத்திரம்: மூலம்
முன்னிரவு 08. 21 வரை.
திருஞான சம்பந்தர்
குருபூஜைத் தினம்
சுபநேரம் 07.22 - 08.52
ராகுகாலம்: 01.22 - 02.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மரியாதையற்ற மனிதன் மிருகத்திற்குச் சமம்.

- கன்பூஷீயஸ்

## மண்டபத் திருத்த வேலைக்கு நிதி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பிரதான மண்டபத் திருத்த வேலைகளை நிறைவு செய்ய பாடசாலை அபிவிருத்திச் சபையினருக்கு 7 லட்சத்து 60 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது.

இந்த வேலைகளை பாடசாலை அபிவிருத்திச் சபையினர் விரைவாக செய்து முடிக்கவுள்ளனர்.

(இ–25)

# வெப்பநிலை அதிகரிப்பால் மிளகாய் செய்கைபாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

வெப்பநிலை அதிகரிப்பினால் பெரும் போகத்தில் மேற்கொள்ளப்பட்ட மிளகாய்ச்செய்கை பெரும்பாதிப்படைந்துள்ளதாக விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மிளகாய்ச் செய்கையின் அறுவடை மே மாதத்துடனே முடிவடைந்து விட்டதுடன் இச் செய்கையை மேற் கொண்ட விவசாயிகள் எதிர் பார்த்த பலனை அடையவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் போக மிளகாய்ச் செய்கை 423 ஹெக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இச் செய்கைக்கு விவசாயிகள் செலவு செய்த பணத்தை விட மிகக் குறைவான வருமானத்தையே பெற்றுள்ளனர். (இ–15–5)

## ஆசிரியர் இல்லை

வடமராட்சி, ஜூன் 10

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் உயிரியல் பாடபோதனைக்கு போதிய ஆசிரியர்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில படிக்கும் மாணவிகள் இதன் காரணமாக இப் பாடபோதனையைப் பெறுவதில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ–173)

## முது கல்விமாணி கற்கைநெறி

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் முதுகல்விமாணி பட்டக்கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். மத்திய கல்லூரியில் இயங்கும் யாழ். பிராந்திய நிலையத்துக்கு வந்துள்ளன.

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரனிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ–ரீ)

# யாழ். மத்திய பஸ்நிலைய கட்டடத்துக்கு ரூ.25 லட்சம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் கட்டடம் அமைக்கும்வேலைகளுக்காககொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்தினால் 25 லட்சம் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்டடம் அமைப்பதற்கான நிதி தயார் நிலையிலிருக்கின்ற போதிலும் பஸ் நிலைய கட்டடப்பகுதியில் அத்துமீறிகடைகள்அமைத்து வியாபாரம் செய்பவார்கள் வெளியேறாமையினால் கட்டட வேலைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிககப்படுகிறது.

இந்தக் கடைக்காரர்களை வெளியேற்றுவது தொடர்பாக யாழ். பொலிஸார் விரைவில் தங்களது இறுதித் தீர்மானத்தை நிறைவேற்றவுள்ளதாக போக்குவரத்துச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்டட வேலைகள் தாமதம் அடைந்ததால் கட்டடம் அமைப்பதற்கெனகிடைக்கப் பெற்ற நிதி திரும்பிவிடலாம் என்று அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

(இ–5)

## ஊழியர் பற்றாக் குறை

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வரை காலமும் எழுதுவினைஞராகப் பணியாற்றிய பெண் ஊழியர் ஒருவர் திருமலையிலுள்ள சுகாதார அமைச்சின் பணிமனைக்கு பதவியுயர்வுபெற்றுசென்றுள்ளனர்.

இதனால் ஏற்கனவே நிலவிய ஊழியர் பற்றாக்குறை மற்றைய ஊழியர்களுக்கு வேலைப்பழுவை ஏற்படுத்தியிருப்பதாக மேற்படி பயிற்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ரீ)

## யாழ்.பிரதேச செயலர் பிரிவில்

# 3, 402 வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதமாகின

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால வன் செயல்களினால் வீடுகள், கடைகள் உட்பட 3 ஆயிரத்து 402 கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இப்படி பிரதேச செயலர் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சேதமான கட்டடங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட மதிப்பீடுகளின் படி 4 ஆயிரத்து 389 வீடுகள் ஒருபகுதி சேதமடைந்தும், 3 ஆயிரத்து 389 வீடுகள் சிறு சேதம் அடைந்தும் உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை தமது பிரிவிலுள்ள 5 ஆயிரத்து 721 குடும்பங்களுக்கு மீளக்குடியேறியோர் நிவாரணமாக 5 ஆயிரம் ரூபா இது வரை வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

மது பிரதேச எல்லைக்குள் 7 ஆயிரத்து 928 குடும்பங்கள் மீளக் குடியமர்வு நிவாரணம் பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இதில் 6 ஆயிரத்து 328 குடும்பங்களே இதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளன. இன்னும் ஆயிரத்து 600 குடும்பங்களின் விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை.

தற்பொழுது தொடர்ந்து 5 ஆயிரம் ரூபா நிவாரணத்தை கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 10

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் ஒழுங்கு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் உடுவில் கற்பொக்குணை வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் மேற்படி மன்ற ஆலோசகர் ச. தியாகராஜா அவர்களின் 'ஆத்மீகம்' என்ற தலைப்பிலான சொற்பொழிவும், பண்ணிசை நிகழ்வும் இடம்பெறும்.

(இ–ரீ)

## நெடுந்தீவு உதவிப்பணம்

யாழ்ப்பாணம் ஜூன் 10

நெடுந்தீவுப் பகுதியில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான மே மாதக் கொடுப்பனவு இன்று புதன்கிழமை முதல் நெடுந்தீவுத் தபாலகத்திலும் மற்றும் ஏனைய உபதபாலகங்களிலும் வழங்கப்படுமென நெடுந்தீவு தபாலக அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ–7)

# ஒவியபோட்டிமாணவருக்கா? பெற்றோர்க்கா?

உலக சூழல் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஓவியப்போட்டியில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்களைச் சார்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கான போட்டி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 1995. 05. 30 சனிக்கிழமை நடைபெற்றது. பள்ளிக்கூடப் பிள்ளைகள் (ஓவியர்கள்) எறும்புகள் இரையைக் கௌவிக் கொண்டு ஓடுவது போன்று, வெள்ளைத் தாள்களுடன் அங்கும் இங்கும் திரிந்ததைப் பார்க்க பெற்றோராகிய எமக்கு சந்தோஷமாக இருந்தது.

ஆனால் போட்டி முடிந்த பின்பு பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேலாயுதம் ம.ம. வித்தியாலயம் சென்ற பொழுது, ''அப்பா, பிள்ளைகளுடைய அப்பா, அம்மா எல்லோரும் வந்து வரைந்து நிறந்தீட்டிக் கொடுத்தனர்'' என எனது 5ஆம் ஆண்டு கல்வி பயிலும் மகளும், ''அப்பா, பெரிய பெரிய அண்ணன்மார் வந்து வரைந்து நிறந்தீட்டிக் கொடுத்தனர்'' என எனது 7ஆம் ஆண்டு கல்வி பயிலும் மகனும் அழாக்குறையாக என்னிடம் முறைப்பாடு செய்தனர். எனது குழந்தைகள் போன்று பல குழந்தைகளின் உளரீதியான தாக்கத்திற்கு காரணகர்த்தாயார்?

இவ்வாறான போட்டிப் பரீட்சைகளை முறையாக ஒழுங்கு செய்ய இயலாத நிர்வாகிகளால், திறமை மிக்க மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்களென்பதை கல்வித் திணைக்களத்தினர் அறிவரா?

பெற்றோரையும், மற்றோரையும் போட்டியில் பங்கு பற்றிய சிலருக்கு அனுமதிப்பதாயின் வீட்டில் இருந்தே வரைந்து நிறந்தீட்டிப் பெற்றிருக்கலாமே? அல்லது பெற்றோருக்கென ஓர் ஓவியப் போட்டியை ஒழுங்கு செய்து கொடுத்திருக்கலாமே. இந்தமுறைகேடானபோட்டியில் பங்கு பற்றிய பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன முடிவு கல்வித் திணைக்களம் கூறப்போகின்றது?

சாம் .செபஸ்ரியன்,

பருத்தித்துறை.

# ஆனந்தசங்கரி போன்ற ஒருவர் மரபுவழி பற்றி பேசுவது வேடிக்கை

## பதில் அளித்து திருநாவுக்கரசு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்10

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்த சங்கரியைப் போன்ற ஒருவர் மரபுவழி பற்றிப்பேசுவது மிகவும் வேடிக்கையானது''

இப்படி யாழ். மாநகர சபையின் உதவி மேயராகப் பணியாற்றி இராஜினாமாச் செய்த த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தெரிவித்தார்.

''பதவிக்கு ஏற்ற மரபு வழிப்படி திருநாவுக்கரசு நடக்கவில்லை' என்ற தலைப்பில் வீ. ஆனந்த சங்கரி வெளியிட்ட அறிக்கைக்கு பதில் அளித்து விடுத்த அறிக்கையில் திருநாவுக்கரசு மேலும் தெரிவித்துள்ளதாவது:

நண்பர் ஆனந்த சங்கரி எனது பதவி துறப்பை யொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது காழ்ப்புணர்வைக் காட்டியுள்ளாரே தவிர நான் தெரிவித்த அரசியல் காரணங்களுக்கு எந்தவித பதிலையும் தரவில்லை.

ஆனந்த சங்கரியைப் போன்ற ஒருவர் மரபுவழி பற்றிப் பேசுவது மிகவும் வேடிக்கையானது. இந்த அறிக்கைக்காக அவருக்கு 'கின்னஸ்' புத்தகத்தில் ஓர் இடம் ஒதுக்கலாம்.

அரசியலில் நான் மிகவும் மதிக்கின்ற ஒரு தலைவர் மு. சிவசிதம்பரம் அவரை யாழ்ப்பாணத்துக்கு வருமாறு கேட்டது நான்செய்த பாவமா?

எனது வாழ்க்கையில் எத்தனையோ இழப்புக்கள் ஏற்பட்ட போதும் என்றும் தமிழினத்தின் விமோசனத்திற்காகப் பாடுபடுவதே எனது கொள்கை.

1960 ஆம் ஆண்டில் நான் உடுவில் தொகுதி வேட்பாளராக நியமனம் கேட்டேன். வி. தாமலிங்கத்தை உடுவில் தொகுதிக்கு வேட்பாளராக நியமித்து விட்டோம் நீங்கள் கிளிநொச்சித் தொகுதிக்குச் செல்லுங்கள் சகல உதவிகளையும் நாங்கள் தருவோம் வென்றாலும், தோற்றாலும் நீங்கள் தான் அத் தொகுதியின் பிரதிநிதி என்று நண்பர் அமிர்தலிங்கம் என்னிடம் சொன்னார்.

அந்த நேரத்தில் பிரபல்யம் இல்லாமல் இருந்த ஆனந்த சங்கரி எனது தாராள மனப் பான்மையால் கிளிநொச்சித் தொகுதிப் பிரதிநிதியானார்.

நான் உயிருக்குப் பயந்தோ அல்லது அனுபவிக்கும் இன்ப, துன்பங்களைத் துறந்தோ ஓடவில்லை, பதவிக்கு ஆசைப் படவும் இல்லை. இந்த நாட்டில் பூரணமான சுதந்திரம் நிலவ வேண்டும். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், ஏனைய சிறுபான்மை இனத்தினர் அனைவரும் எந்தவித அச்சமும் இன்றி சுதந்திரமாக வாழவேண்டும்.

அறிக்கைகள் விடுவதற்காகக் கொழும்பில் ஓர் அலுவலகம் வைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ''சுற்றுலா'' வருபவர்களைப் பற்றி எனக்கு எவ்வித அக்கறையும் இல்லை நாம் இந்த நாட்டில் மனிதர்களாக வாழவேண்டும்.

கடந்த ஆறு மாதங்களிலும் எனது முழு அர்ப்பணிப்புக்களையும் செய்து பெற்றுக்கொண்டதற்கு திரு. ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கை நல்ல பதிலாக அமைந்துள்ளது. அவருக்கு எனது நன்றியும் வாழ்த்துக் களும் — என்றுள்ளது.

(இ–3)

# தடுத்து நிறுத்த முடியாதா?

பிரான்பற்று மாரியம்மன் ஆலயத்தில் 23 - 05 - 98 அன்று 150 இற்கும் மேற்பட்ட வாய்பேசாத ஜீவன்கள் சமயத்தின் பெயரால் - சைவத்தின் முத்திரையால் — பலியிடப் பட்டிருக்கின்றன. சைவம் என்பதன் பொருளே ஜீவகாருண்யமாகும். அசைவ உணவினை விலக்கி சைவ உணவுடன் வாழ்வதையும் இச் சொல் சுட்டும். அப்பொருளில் இருந்தே சைவம் என்பது கொல்லாமை, உயிரிரக்க கோட்பாடு, அனைத்து உயிர்களிலும் அன்பு பாராட்டுதல் என்ற உயர் மனித நேயத்தை புலப்படுத்துகிறது. இதனால் ''அன்பே சிவம்'' என்றார் திருமூலர். பிற உயிர்கட்கு ஹிம்சை செய்யாதவன் எவனோ அவனே உண்மையான ''இந்து'' என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஆனால் நடைமுறையில் சைவர்களாகிய நாம் காண்பதென்ன? நாம் உண்மையிலே ''சைவர்'' தானா? படிப்பது தேவாரம் இடிப்பது சிவாலயமா? மனித நேயம்மனித மேம்பாடு பற்றிப் பேசும் இந்து சமய நிறுவனங்கள் இத்தகைய உயிர்க் கொலையைப் பார்த்து சகித்துக் கொண்டிருக்கலாமா? வாய் பேசா ஜீவன்களையே காப்பாற்ற முடியாத நாம் எவ்வாறு வாய் பேசும் மனிதர்களைக் காப்பாற்றப் போகின்றோம்?

என் போன்ற இந்து இளைஞர்களின் மனம் இத்தகைய உயிர்க் கொலைகளைத் தடுத்து நிறுத்துவாரில்லையா? என எண்ணி வேதனைப்படுகின்றது. எமது யாழ்ப்பாணத்திலே எத்தனை இந்து சமய நிறுவனங்கள் இருக்கின்றன. இந்து சமயப் பேரவை, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், துர்க்கா தேவஸ்தானம், இந்து குருமார் ஒன்றியம், சைவ வித்தியா விருத்திச்சங்கம், இந்து நாகரிகத் துறை யாழ். பல்கலைக்கழகம், இந்து இளைஞர் பேரவை, இந்துமா மன்றங்கள், சத்ய சாயி சேவா மன்றங்கள், அனைத்திற்கும் ஒரு பரிவான வேண்டுகோள் முடிந்ததைத் தடுக்க முடியாவிட்டாலும் இனி நடக்கப்போகும் கவுணாவத்தை வைரவர் ஆலய உயிர்ப் பலியையாவது தயவு செய்து தடுத்து நிறுத்துங்கள். அனைவரும் ஒன்று சேர்ந்து விரைந்து செயற்படுங்கள். சட்டரீதியாக மிருகபலியைத் தடுக்க ஒத்துழைக்க வேண்டும் என்பது எமது பெரு விருப்பம்.

இ. பரந்தாமன்

கொக்குவில்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஹண்டி கப்பல் மூலம் தெற்குக்கு வெங்காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

பருத்தித்துறையில் தற்போது தங்கி நிற்கும் ஹண்டி கப்பல் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு தொகுதி வெங்காயத்தை ஏற்றிக்கொண்டு இன்னும் ஒரு சில தினங்களில் கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் விவசாயப் பகுதி மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயச் சம்மேளனம், தனியார் வர்த்தகர்கள் ஆகியோரின் ஏற்பாட்டிலேயே வெங்காயம் தற்போது கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பல் மூலம் நாட்டின் தென் பகுதிகளுக்கு வெங்காயத்தை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூர்ச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை கணிசமான அளவு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

# ஐந்து இளைஞர்கள் காணாமற்போயினர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கடந்த மாதம் காணாமல் போனதாகக் கருதப்படும் 5 இளைஞர்களை கண்டுபிடித்துத் தருமாறு அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

சிவராசா சூரியகுமார் (17 வயது — நல்லூர்), லோகநாதன் சுதர்சன் (16 வயது — நல்லூர்), செந்தில்நாதன் பார்த்தீபன் (17 வயது — நல்லூர்), கனகராசா விவேகா (17 வயது — இருபாலை) இவர்கள் நால்வரும் மே 20 ஆம் திகதியும், பரஞ்சோதி அசோகன் (17 வயது — உசன் தெற்கு, என்பவர் மே 14 ஆம் திகதியும் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# மீனவர் படுகொலை நினைவு தினம் இன்று

குருநகர், ஜூன் 10

குருநகரில் இருந்து மீன் பிடிப்பதற்காக 'தூயஒளி' படகில் சென்ற குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் மண்டைதீவுக் கடலில் வெட்டிக் கொலை செய்யப்பட்டு 12 ஆண்டுகள் இன்றுடன் முடிவடைகின்றன.

இப்படுகொலைச் சம்பவம் 10-06-1986 இல் நடைபெற்றது.

கொலை செய்யப்பட்ட இம் முப்பத்தொரு மீனவர்கள் நினைவாக குருநகர் சனசமூக நிலையத்தின் கிழக்குப் புறமாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி சேதமடைந்த நிலையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தொழில் நுட்ப பரீட்சைகள்

தொழில் நுட்பக் கல்லூரிகளின் இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உயர் தேசிய வணிக தேர்வு II ஆம் ஆண்டு 16 ஆம் திகதியும், III ஆம் ஆண்டு 22 ஆம் திகதியும், IV ஆம் ஆண்டு 29 ஆம் திகதியும் நடைபெறும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# நாட்டார் இசை மாலை இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நாட்டார் இசைமாலை என்னும் புதுவகை கலைநிகழ்வு நடைபெற உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், சிறுவர்கள் சேர்ந்து அளிக்கும் இந்த நிகழ்ச்சியில் எமது பிரதேசத்தில் முன்னர் எல்லாம் அடிக்கடி காதில் கேட்ட ஆனால் இப்போது அரிதாகிவிட்ட நாட்டார் பாடல்கள் பாடப்பெறும்.

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி, ஆராரோ ஆரிவரோ, சாஞ்சாடம்மா சாஞ்சாடு, குத்துவிளக்கடி நானுனக்குப் பெண்ணே கோமளப் பூவடி நீயெனக்கு ஆகிய பிரபல பாடல்கள்மற்றும் கும்மி, வசந்தன், ஊஞ்சல் பாடல்கள் உட்பட முழுக்க முழுக்க நாட்டார் பாடல்களே இசைக்கப்படும்.

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் நடத்தும் இந்த நிகழ்வை கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் நெறியாள்கை செய்து வழங்குகிறார். (அ)

# கப்பலில் தென்னம் நாற்றுக்கள்

தென் இலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு முப்பதாயிரம் தென்னம் நாற்றுக்களை கப்பலில் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களில் காய்த்துப் பயன்தரக்கூடிய டி. ரி. கலப்பு இன நாற்றுக்களில் 25 ஆயிரம் நாற்றுக்களும் 5 ஆயிரம் செவ்விளநீர் நாற்றுக்களுமே இவ்வாறு கொண்டுவரப்படவுள்ளதாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) தெரிவித்தார். (இ-ரி)

# தார் மற்றும் பொருள்கள் மாகோ, சஜிந்தகப்பல்களில்

## வடக்கே வருகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்டத்துக்குரிய தார் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு மாகோ, சஜிந்த ஆகிய இரு கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படவிருப்பதாக யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் வீதிகள் பலவற்றைத் திருத்துவதற்கு தார் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இம்முறை கப்பலில் அதிகளவு தார் பரல்கள் எடுத்துவரப்படுவதாகவும் —

இவ்விரு கப்பல்களுடன் ''குமண'' கப்பலும் குடாநாட்டிற்குரிய நுகர்வுப் பொருள்களுடன் விரைவில் பருத்தித்துறை நோக்கிப் புறப்படலாம் எனவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-7)

# யாழ். விவசாயிகளுக்கு 5,000 மண்வெட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

உலக உணவு ஸ்தாபனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மண்வெட்டிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறிய விவசாயிகளுக்கு மீண்டும் மண்வெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக 6 ஆயிரத்து 696 மண்வெட்டிகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்வெட்டிகளின் தொகையும் வழங்கப்படவுள்ள இடங்களின் விவரங்களும் வருமாறு:-

| | |
|---|---|
| ★ கோப்பாய் | 1,500 |
| ★ உடுவில் | 750 |
| ★ தெல்லிப்பழை | 396 |
| ★ சண்டிலிப்பாய் | 750 |
| ★ சங்கானை | 500 |
| ★ ஊர்காவற்றுறை | 200 |
| ★ வடமராட்சி | 600 |
| ★ கைதடி | 400 |
| ★ நல்லூர் | 750 |
| ★ பளை | 500 |
| ★ சாவகச்சேரி | 150 |
| ★ வேலணை | 150 |
| ★ நெடுந்தீவு | 50 |

# சமய நிகழ்வுகள்

கொழும்புத்துறை, ஜூன் 10

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு ஸ்ரீ வதரிபீடமன்றுளாடும் பெருமான் விநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று புதன் மாலை 5.00 மணிக்கு பூங்காவனத் திருவிழா இடம்பெறும்.

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வருடாந்த உற்சவ விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகளும், பிற்பகல் 12.30 மணிக்கு அன்னதானமும், மாலை 5.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன், 10

நேற்று முன்தினம் வைகாசி விசாக தினத்தன்று கந்தர்மடம் அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நிகழ்ந்த தீமிதிப்பு வைபவத்தில் சுமார் 30 அடியார்கள் வரை பங்குபற்றினர்.

★ ★ ★

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ மூத்தநயினார் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30க்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் மாலை 3.30 தொடக்கம் 4.30 வரை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் பெரியபுராண தெய்வீக தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

# நெடுந்தீவு படகுச் சேவை நேற்று இல்லை

நெடுந்தீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு நேற்று வரவேண்டிய பயணிகள் படகு வராததால் நெடுந்தீவுக்கான சேவை நேற்று நடைபெறவில்லை.

நெடுந்தீவுக்குச் செல்வதற்காக ஊர்காவற்றுறைக்குச் சென்ற அரசாங்க ஊழியர்கள் படகு வசதியில்லாததால் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினர்.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் படகு பழுதடைந்ததாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-111)

# இன்று

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கருகில் புதிதாக அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தை இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வ. விஜயரட்ணத்தினால்திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

மருதடிப்பகுதியில் இயங்கி வந்த மரக்கறிச் சந்தைக்குப் பதிலாகவே இப் புதிய மரக்கறிச் சந்தையை பருத்தித்துறை நகர சபை கட்டி முடித்துள்ளது. (உ-109)


# மங்களகரமான திறப்புவிழா

## ARUN VIDEO MOVIE



எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற "அருண் வீடியோ மூவி" என்னும் நிறுவனம் 11-06-1998 வியாழக்கிழமை 10.15 தொடக்கம் 12.00 மணிவரையுள்ள சுபவேளையில் மெயின் வீதி, நெல்லியடியில் மங்களகரமாகத் திறந்துவைக்கப்பட இருக்கின்றது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு உங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

தமிழ், ஆங்கில படங்கள், திறமான நாடகங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்ற அத்தனையும் ஒறிஜினல் CD யில் இருந்தும் தரமான பிரதிகளிலிருந்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



## DISH ANTENNA

செயற்கைக் கோளிலிருந்து படங்களைப்பெறும் டிஸ் அன்ரெனா விற்பனைக்கு உண்டு. EUROSTAR, SAMSUNG போன்ற நிறுவனங்களின் தயாரிப்பான டிஸ் அன்ரெனாக்கள் பல்வேறு அளவுகளில் விற்பனைக்கு உண்டு. உங்கள் வீடுகளில் பொருத்தி மகிழுங்கள். விலை ரூபா 30,000/- இலிருந்து எமது காட்சி அறையில் அதன் செய்முறையைப் பார்த்து மகிழலாம்.

Sun TV, TVI, Gemini TV, Asiane TV, Utaya TV, Sony TV, BBC, CNN, ABN Singapoore, Cartoon, Network, Music TV (MTV), Home TV, DDI, Music Asia, ATN, Vijay TV, Raj TV, DD 1, DD 2, DD 3, DD 4, DD 5, DD 6, DD Motro, RTP (France), Egipt, China, Taiwan, Star Plus, Star News, இதுபோன்ற 60 க்கும் மேற்பட்ட Channal களில் உங்கள் வீடுகளுக்கு உத்தரவாதத்துடன் பொருத்தித்தரப்படும்.

### உலகம் உங்கள் விரல் நுனியில்!

TV, வீடியோ டெக், மின்விசிறி, பல்வேறுவகையான Antenna க்கள் ரேடியோ, வீட்டுச் சமையல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், வீடியோ கசெற், Audia Cesset ஆகியவையும் மிகவும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

''எமது காட்சியறைக்கு வந்து செயல்முறைகளைப் பார்வையிடுங்கள்''

(56753)



யாழ்ப்பாண புனருத்தாரண மீள் குடியமர்வுத்திட்டம் (JRRP)

# கணணித்துறையில் தேர்ச்சியுள்ளவர்கள் தேவை

## இரு வெற்றிடங்கள்

தகைமைகள்:-

12 பேருக்கு பயிற்சியளிக்கக்கூடிய திறமையுடனும் ஆங்கிலம் எழுதப் பேசத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். Windows 95, Microsoft Office, Database இவற்றில் கைதேர்ந்தவராகவும கணணி பற்றிய Hardware அறிவுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

வேலை செய்வதற்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சை ஆனி மாதம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து நடைபெறும். சுய விபரக்கோவை கொண்டு வரவும்.

யா. பு. மீ. தி.
125, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (56755)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிங்குரான்கெத்த பிரதேச சபை எரிப்பு

கொழும்பு, ஜூன் 10

கண்டி ஹிங்குரான்கெத்த பிரதேச சபை அலுவலகம் நேற்று இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது.

சபையின் முக்கிய ஆவணங்கள் உட்பட பல்வேறு பொருள்கள் தீக்கரையாகின.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றோகண அபேய குணவர்த்தனா இது பற்றி கருத்து தெரிவிக்கையில்—

'மோசடிகளை மூடிமறைப்பதற்காக ஒரு குழுவினரின் திட்டமிட்ட செயலாகவே இது தோன்றுகின்றது'' என்றார்.

அதேநேரம் நேற்று முன்தினமிரவு இப்பிரதேசத்திலுள்ள ஐ. தே. கட்சிப் பிரமுகர் ஒருவரின் வீடு தாக்கப்பட்டது. இப் பிரமுகரும் தாக்குதலுக்குஇலக்கானார். (உ-21)

# கொழும்பு பல்கலையின் 105 மாணவர்கள் இடை நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 10

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் 105 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கலைப்பீடத் தலைவர் உட்பட 23 போதனாசிரியர்களை பணயக்கைதிகளாகத் தடுத்து வைத்திருந்த சம்பவம் தொடர்பாகவே இவர்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடுதி வசதிகளும் ஏனைய அடிப்படை வசதிகளும் மீளப் பெறப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய மாணவர்கள் பல்கலைக் கழகத்துள் வருவது தடை செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பல்கலைக் கழக துணைவேந்தர் டபிள்யூ. டி. லக்ஷ்மன் தலைமையில நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கலைப் பீடத்தில் இடம் பெற்ற மாணவர் அவைத் தேர்தலுக்குப் பின்னர் நடந்தசம்பவம் தொடர்பாக கலைத்துறை தலைவர் உட்பட போதனாசிரியர்களை மாணவர் குழு ஒன்று தடுத்து வைத்தது. (உ-6)

## யாழ். மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் மத்திய கல்லூரி இந்து மாமன்றமும், பருத்தித்துறை சாரதாசேவாச்சிரமும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும், பகவத்கீதை உபதேசம் பற்றிய சிலை திறப்பு விழாவும் இன்று காலை 10.30 மணியளவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக வடக்கு — கிழக்கு மாகாண விளையாட்டுததுறை அமைச்சு ஆலோசகர் கலாநிதி நா. எதிர் வீரசிங்கம் கலந்து கொள்வார்.

ஓவியரும், சிற்பக் கலைஞருமான எஸ், சிவப்பிரகாசம் இவ்வைபவத்தில் கௌரவிக்கப்படுவார். (உ-3)

## மண்ணெண்ணெய்··

(முதலாம் பக்கத் தொடர்)

மோசமாகி இருந்திருக்கும் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்பு அதிகாரி நீர்கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்—

நீர் கொழும்பு கொச்சிக் கடைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை மின் மாற்றி ஒன்று தகர்க்கப்பட்டது தெரிந்ததே. (உ-3-6-21)

## கொழும்பில்···

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டனர்.

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்படும்போது, அவர்கள்தடுத்து வைக்கப்படும் பொலீஸ்நிலையங்கள் முன்பாகப் பெருத்த எடுப்பில் வெகுஜனப் போராட்டம் நடத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

தெற்கில் நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசரகால நீடிப்பு பிரேரணைக்கு எதிராக வாக்களித்து தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றும் கொண்டு வரப்பட்டது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேச்சு நடத்தி இது தொடர்பாக முடிவு எடுப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலமும் இக் கூட்டத்தில் பங்குபற்றினார்.

# மரண அறிவித்தல்

## பொன்னையா கந்தையனார்

கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா கந்தையனார் 08-06-98 திங்களன்று இறைபதமெய்திவிட்டார்.

இவரது மரணச் சடங்குகள் நேற்று (09-06-98) பிற்பகல் 3 மணியளவில் கொடிகாமம் மயானத்தில் நிறைவெய்தியது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;

க. சிவகோசாரியார் (மகன்)
(ஆசிரியர், டிறிபேர்க் கல்லூரி)
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(56761)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சு மனையில் 10-06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நோயாளர் கப்பல் சேவை இடைநிறுத்தம்

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் நடத்தப்படும் நோயாளர் கப்பல் சேவை இரு வாரங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்சேவையில் ஈடுபடும் கப்பல் திருத்தவேலைக்காக கொழும்பு செல்வதாலேயே இடை நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# சைவ உணவகம் 'சீல்' வைப்பு

கொழும்பு, ஜூன் 10

கொழும்பில் வாந்திபேதி பரவுவதாகக் கூறப்படுவதை தொடர்ந்து பம்பலப்பிட்டி, புறக்கோட்டைப் பகுதியில் இரு சைவ உணவு விடுதிகள் நேற்றுச் ''சீல்'' வைக்கப்பட்டன.

அந்த விடுதிகளைச் சோதனையிட்ட சுகாதாரப் பகுதியினர் பின்னர் இரு விடுதிகளையும் ''சீல்'' வைத்தனர். (உ-3)

## வடமாகாண··

(முதலாம் பக்கத்தொடர்)

காரிசளுடனும். வடக்கு — கிழக்கு மாகாண சபை வீதி அமைப்புத் திணைக்கள அதிகாரிகளுடனும் பேச்சுநடத்தியிருந்தார்.

இந்தப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான தார் மற்றும் இயந்திர உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளை ஈ. பி. டி. பி, செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொள்ளவிருப்பதாக அவரின் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-1-3)

## யாழ்···

(முதலாம் பக்கத்தொடர்)

பதியாக ஏகநாதனும் கடமையாற்றி வருகின்றனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு யாழ். நீதிமன்ற நீதிபதியும் ஊழியர்களுமே வாரத்தில் ஒரு நாளைக்கு அங்கு சென்று அமர்வு நீதிமன்றங்களை நடத்தி வருகின்றனர்.

சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்த பின்னர் நீதிமன்ற அமர்வுகளை தற்காலிகமாக நிறுத்துவது என முடிவு செய்ததாக அறிய வந்தது. (உ-15)

## இரு···

(முதலாம் பக்கத்தொடர்)

இடம்பெற்ற கலை நிகழ்ச்சியின் போது மேற்படி இரு கிராமத்தவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாசவும் —

அதன் எதிரொலியாகவே நேற்று கோஷ்டி மோதல் மூண்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

## யுத்த···

(முதலாம் பக்கத்தொடர்)

தில் ஆற்றப்படும் உரை அல்லது அதன் பகுதி நாட்டின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடும் என்று அரசுத் தரப்பினர் அல்லது வேறு எம். பிக்கள் சுட்டிக்காட்டினால், அந்த உரையை அல்லது அதன் பகுதியை நாடாளுமன்ற உரைகளைப் பதிவு செய்யும் 'ஹன்சாட்டில்' இடம்பெறாமல் நீக்கிவிடும்படி சபாநாயகர் உத்தரவிடலாம். அத்தகைய நிலைமை ஏற்பட்டாலன்றி—

யுத்த நிலைமை குறித்தும், அது தொடர்பான புள்ளி விவரங்கள், செய்திகள் குறித்தும் எதிர்க்கட்சி எம். பிக்கள் இன்று சபையில் வெளியிடும் தகவல்கள் யாவும் பத்திரிகைகளில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# எம். எஸ். சி. கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் உயிர் நுட்பவியல் முதுமாணி (எம். எஸ். சி.) பட்டத்திற்கான கற்கை நெறியில் பயில்வதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இரசாயனவியல், உயிரியல், வைத்தியம், பல் வைத்தியம், விலங்கு வைத்தியம், விவசாயம்ஆகியதுறைகளிலும் — பொறியியல் துறையிலும் பட்டம் பெற்றவர்களும், பட்டம் பெறத் தகுதியுடையவர்களும் இக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பதற்கான முடிவு நாள் ஜூலை மாதம் 15ஆம் திகதி எனவும் —

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ''பதிவாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும்— பலகலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார். (இ-ரி)

# குடியமர்வுக் கொடுப்பனவு: குடும்ப எண்ணிக்கையை கணிப்பில் எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு தொடர்பாக பிரதேச செயலர் பிரிவுகளுக்கான ஒதுக்கீடு பற்றிதீர்மானிக்கும் போது ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை கணிப்பில் எடுத்துக் கொள்ள வேண்டுமென பிரதேச செயலகங்களின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கொடுப்பனவுக்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும் போது அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் ஒரே எண்ணிக்கையான குடும்பங்களைச் சிபார்சு செய்யாமல் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய முறை இது வரை பின்பற்றப்படாததனாலேயே சில பிரதேச செயலகங்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம் கொடுக்கப்பட்டும், சில பிரதேச செயலகங்களில் 40 சதவீதத்துக்கும் உட்பட்ட குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வு நிவாரணம் கொடுக்கப்பட்டும் உள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை சில பிரதேச செயலகங்கள் தமக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட கொடுப்பனவைக் கொடுப்பதில் காட்டும் அசிரத்தையும், கிராம அலுவலர்களின் பொறுப்பு இல்லாத்தனமுமே காரணமெனவும் கூறப்படுகிறது. இதனாலேயே இத்தகைய கொடுப்பனவில் வீண்காலதாமதம் காட்டப்படுவதாகவும் கூறப்படுகிறது. (இ-7)

# ஐ. நா. தூதரக உதவியுடன் யாழ். செயலர் பிரிவில் 4 திட்டங்கள் அமுலாகும்

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் நிதி உதவியுடன் 4 திட்டங்கள் யாழ். பிரதேச செயலர் பிரிவில் அமுல்செய்யப்படவுள்ளன.

பாசையூர் இறங்குதுறையைப் புனரமைக்க ரூ. 32 லட்சமும் —

நாவாந்துறை மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ரூ. 5 லட்சமும் —

மேற்படி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 5 பொதுக் கிணறுகளைப் புனரமைக்க 1 லட்சமும் —

கொய்யாத்தோட்டம் பகுதியில் உள்ள 2 குளங்களைப் புனரமைக்க இரண்டரை லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சுயமுயற்சி உதவித் திட்டம் ரூபா 10ஆயிரம் கொடுப்பனவு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சுயமுயற்சி உதவித்திட்டத்தின் கீழ் 10ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

கோழி, ஆடு வளர்ப்பு, தையல் தொழில் ஆகியவற்றை மேற்கொள்ளும் 30 பேர் இக்கடனைப் பெற்றுள்ளனர்.

முதற்கட்டக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு விட்டது. அவர்களது தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் எடுத்து மிகுதிப் பணம் வழங்கப்படுமென செயலக சமூக சேவை உத்தியோகஸ்தர் சு. வரதராசன் தெரிவித்தார்.

பொதுசன மாதாந்த உதவிப்பணத்தை நிறுத்தி, அதற்குப் பதிலாக இவ்வுதவி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-27)

# உலக நாய்ப் போட்டியில் இலங்கைப் பொலீஸ் நாய்

பின்லாந்தில் நடைபெறும் உலக நாய்ச் சாம்பியன் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக முதன் முதலாக இலங்கையில் இருந்து நாய் ஒன்று சென்றுள்ளது.

கண்டியில் பராமரிக்கப்பட்டு வந்த ஹரி என்ற பொலீஸ் நாயே உலக நாய்ச் சாம்பியன் போட்டியில் பங்கு கொள்ளும் தகுதியைப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து ஹரி தனது பயிற்சியாளருடன் பின்லாந்துக்குச் சென்றுள்ளது.

எட்டு வயதான ஹரியின் உத்தியோகபூர்வமான பெயர் டெல்டா நைற் கிங் என்பதாகும்.

வெடிமருந்துப் பொருள்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பயிற்றப்பட்ட ஹரி இலங்கையில் நடந்த நாய்ப் போட்டிகளில் 6 வருடங்கள் தொடர்ச்சியாக முதலாவது இடத்தில் வந்தது.

இலங்கையில் பொலீஸ் மோப்ப நாய்ப்பிரிவு அமைத்து 50 ஆண்டுகள் பூர்த்தியடையும் நிலையில் முதல் தடவையாக இலங்கைப் பொலீஸ் நாய் ஒன்று உலக நாய்ச் சாம்பியன் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org